# யூன் – 01 – வெள்ளி

**தூய ஜஸ்டின்**

**"என் இல்லம் மக்களினங்கள் அனைத்திற்கும் உரிய இறைவேண்டலின் வீடு" – மாற்கு11:17**

## முதல் வாசகம் : 1 பேதுரு 4 : 7 – 13

சகோதர சகோதரிகளே எல்லாவற்றிற்கும் முடிவு நெருங்கிவிட்டது. எனவே, இறைவனிடம் வேண்டுதல் செய்யுமாறு கட்டுப்பாடோடும் அறிவுத் தெளிவோடும் இருங்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, ஒருவருக்கொருவர் ஆழ்ந்த அன்பு காட்டுங்கள். ஏனெனில், அன்பு திரளான பாவங்களையும் போக்கும். முணுமுணுக்காமல் ஒருவருக்கொருவர் விருந்தோம்புங்கள். நீங்கள் கடவுளுடைய பல்வகை அருள்கொடைகளின் சீரிய பொறுப்பாளர்கள். எனவே உங்களுள் ஒவ்வொருவருக்கும் தாம் பெற்றுக்கொண்ட அருள்கொடையைப் பயன்படுத்தி, ஒருவருக்கொருவர் பணிபுரியுங்கள். ஒருவர் பேசும் கொடையைப் பெற்றிருந்தால், அவரது பேச்சு கடவுளுடைய வார்த்தைகளைப்போல் இருக்கட்டும். ஒருவர் பணிசெய்யும் கொடையைப் பெற்றிருந்தால், கடவுள் அருளும் ஆற்றலைப் பெற்றவர்போல் பணிசெய்யட்டும் இவ்வாறு இயேசு கிறிஸ்துவின் வழியாகக் கடவுள் அனைத்திலும் பெருமை பெறுவார். அவருக்கே மாட்சியும் வல்லமையும் என்றென்றும் உரித்தாகுக! ஆமென். அன்புக்குரியவர்களே, துன்பத்தீயில் நீங்கள் சோதிக்கப்படும்போது, ஏதோ எதிர்பாராதது நேர்ந்துவிட்டதென வியக்காதீர்கள். மாறாக, கிறிஸ்துவின் துன்பங்களில் நீங்கள் இத்துணை பங்கு கொள்கிறீர்கள் என எண்ணி மகிழுங்கள். அப்பொழுது கிறிஸ்துவின் மாட்சி வெளிப்படும் வேளையில் இன்னும் மகிழ்ந்து பேருவகை கொள்வீர்கள்.

**பதில்பாடல் :** மண்ணுலகிற்கு நீதித்தீர்ப்பு வழங்க ஆண்டவர் வருகிறார்.

## நற்செய்தி : மாற்கு 11 : 11 - 26

அக்காலத்தில் இயேசு எருசலேமுக்குள் சென்று கோவிலில் நுழைந்தார். அவர் அனைத்தையும் சுற்றிப் பார்த்துவிட்டு, ஏற்கெனவே மாலை வேளையாகி விட்டதால், பன்னிருவருடன் பெத்தானியாவுக்குப் புறப்பட்டுச் சென்றார். மறுநாள் பெத்தானியாவை விட்டு அவர்கள் திரும்பிய பொழுது இயேசுவுக்குப் பசி உண்டாயிற்று. இலையடர்ந்த ஓர் அத்திமரத்தை அவர் தொலையிலிருந்து கண்டு, அதில் ஏதாவது கிடைக்குமா என்று அதன் அருகில் சென்றார். சென்றபோது இலைகளைத்தவிர வேறு எதையும் அவர் காணவில்லை. ஏனெனில் அது அத்திப் பழக்காலம் அல்ல. அவர் அதைப் பார்த்து, "இனி உன் கனியை யாரும் உண்ணவே கூடாது" என்றார். அவருடைய சீடர்கள் இதைக் கேட்டுக்கொண்டி ருந்தார்கள். அவர்கள் எருசலேமுக்கு வந்தார்கள். கோவிலுக்குள் சென்றதும் இயேசு அங்கு விற்பவர்களையும் வாங்குபவர்களையும் வெளியே துரத்தத் தொடங்கினார் நாணயம் மாற்றுவோரின் மேசைகளையும் புறா விற்பவர்களின் இருக்கைகளையும் கவிழ்த்துப்போட்டார். கோவில் வழியாக எந்தப் பொருளையும் எடுத்துச் செல்ல அவர் விடவில்லை. "என் இல்லம் மக்களினங்கள் அனைத்திற்கும் உரிய இறைவேண்டலின் வீடு என அழைக்கப்படும்" என்று மறைநூலில் எழுதியுள்ளது" என்று அவர்களுக்குக் கற்பித்தார் "ஆனால் நீங்கள் இதைக் கள்வர் குகையாக்கிவிட்டீர்கள்" என்றார். தலைமைக் குருக்களும் மறைநூல் அறிஞர்களும் இதைக் கேட்டு, அவரை எப்படி ஒழித்துவிடலாம் என்று வழிதேடினார்கள். எனினும் கூட்டத்தினர் அனைவரும் அவரது போதனையில் ஆழ்ந்து வியந்திருந்ததால் அவர்கள் அவருக்கு அஞ்சினார்கள். மாலை வேளை ஆனதும் இயேசுவும் சீடர்களும் நகரத்திலிருந்து வெளியேறினார்கள். காலையில் அவர்கள் அவ்வழியே சென்றபோது அந்த அத்தி மரம் வேரோடு பட்டுப்போயிருந்ததைக் கண்டார்கள். அப்போது பேதுரு நடந்ததை நினைவுகூர்ந்து அவரை நோக்கி, "ரபி, அதோ நீர் சபித்த அத்திமரம் பட்டுப்போயிற்று" என்றார். அதற்கு இயேசு அவர்களைப் பார்த்து, "கடவுள்மீது நம்பிக்கை கொள்ளுங்கள். உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் எவராவது இந்த மலையைப் பார்த்து, "பெயர்ந்து கடலில் விழு" எனத் தம் உள்ளத்தில் ஐயம் எதுவுமின்றி நம்பிக்கையுடன் கூறினால், அவர் சொன்னவாறே நடக்கும். ஆகவே உங்களுக்குச் சொல்கிறேன் நீங்கள் இறைவனிடம் வேண்டும்போது எவற்றையெல்லாம் கேட்பீர்களோ அவற்றைப் பெற்று விட்டீர்கள் என நம்புங்கள் நீங்கள் கேட்டபடியே நடக்கும். நீங்கள் வேண்டுதல் செய்ய நிற்கும்போது யார் மேலாவது நீங்கள் மனத்தாங்கல் கொண்டிருந்தால், மன்னித்துவிடுங்கள். அப்போது உங்கள் விண்ணகத் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிப்பார்" என்று கூறினார்.

**தியானம்:** எல்லாம் வல்ல இறைவனோடு நமக்குள்ள உறவு ஆழமானதாக இருக்கிறதா? நாம் கேட்டது கிடைக்காவிட்டாலும் ஆற்றல் மிக்க இறைவனின் வல்லமையில் நம்பிக்கை உள்ளவனாக இறை உறவில் வளர்வதற்கு முயற்சிகள் எடுக்கிறேனா? என சிந்தித்து நமது வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்ள நற்செய்தி (மாற்கு11:11–26) எம்மை யூன் மாத முதல் நாளில் அழைக்கிறது. நாம் எமது தேவைகளுக்காகச் செபித்து அவை நிறைவேறாத போது ஏன் எனது செபங்கள் கேட்கப்படவில்லை? என்று, கடவுளிடத்தில் நம்பிக்கை இழக்க ஆரம்பிக்கிறோம். இன்றைய நற்செய்தி கடவுளிடத்தில் எப்படிப்பட்ட மனநிலையோடு செபிக்கவேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. கடவுளிடத்தில் செபிக்கிறபோது இருக்க வேண்டிய முக்கியமான மனநிலை: அமைதியான மனம் எனப்படும். நாம் இறையருளைப் பெற்றுக்கொள்வதற்கு இது மிகவும் அவசியமாகிறது. அமைதியான மனம் எதற்காக? என்ற கேள்வி நமக்குள்ளாக எழலாம். கடவுளிடத்தில் கேட்பதற்கு முன்னதாக, கடவுளுக்கும், நமக்கும் உள்ள அடிப்படை உறவு நிலை நன்றாகவும் ஆழமாகவும் இருக்கவேண்டும். அமைதியான மனம் எனப்படுவது இறை உறவுநிலையின் வெளியடையாளம். கடவுளுக்கும், நமக்குமான உறவில் நல்ல புரிதலோ, அடித்தளமோ இல்லாமல் அமைதியான முறையில் செபிக்கமுடியாது. நமது இதயத்தில் கடவுளைப்பற்றிய கசப்புணர்வோ, வெறுப்போ, மனக்குறையோ இல்லாத நிலைவேண்டும். கடவுளிடத்தில் ஆழமான உறவு, கடவுளின் மாட்சிமை, அவரின் வல்ல செயல்களைப்பற்றிய மேன்மை இருக்கவேண்டும். அதுதான் இறைவனின் அருளை நமக்குப் பெற்றுத்தரும். இறைவனிடம் நமக்குள்ள உறவு ஆழமானதாக இருக்கிறதா? நாம் கேட்டது நினைத்த நேரத்தில் கிடைக்காவிட்டாலும், இறைவனின் ஆற்றலில் நம்பிக்கை உள்ளவனாக இருக்கிறேனா? இறை உறவில் வளர்வதற்கு முயற்சிகள் எடுக்கிறேனா? என சிந்தித்து நமது வாழ்க்கைமுறையை அமைத்துக் கொள்வோம். மனிதப் பார்வையில் மன்னிப்பு எளிதாகக் கைகூடுவதன்று. ஆனால் கடவுளின் பார்வையை நமதாக்கிச் செயல்படும் போது மன்னிப்பு என்பது வாழ்க்கையை வரையறுக்கின்ற சிறப்பாகமாறும். மன்னிப்பு என்பது அன்பின் தலை சிறந்த வெளிப்பாடாகும். மன்னிப்பின் ஊற்று கடவுளே. நம் உள்ளத்தில் மன்னிக்கும் மனப்பாங்கு இருந்தால் நம்மில் இறையன்பும் பிறரன்பும் துலங்கும்.